குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.315/2025

அ.சா.1

2026–ம் ஆண்டு பிப்ரவரி 02–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஷோபா | தொழில் | |
| தந்தை பெயர் | அப்பாவு | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.07 மணி,

Accused Prakashraj present. Advocate Mr.Raanapradapsingh present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் பிள்ளையார் கோயில் தெரு என்ற இடத்தில் குடியிருந்து, சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2022 ஆம் ஆண்டு ஆஜர் எதிரியிடம் எனக்கு வேலை வாங்கி தருவதற்காக ரூ.7,00,000/–ம் பணம் கொடுத்திருந்தேன். எனது நண்பர் சக்திவேல் என்பவரும், எதிரியிடம் அவருக்கு வேலை வாங்கி தருவதற்காக ரூ.4,00,000/–ம் பணம் கொடுத்திருந்தார். அதன்பின்பு, அந்த பணத்தை நான் அவரிடம் திருப்பி கேட்டபோது அவர் தராததால், எங்களுக்கிடையே பிரச்சினை இருந்து வந்தது.

2. கடந்த 27.12.2022 ஆம் தேதி தாரமங்கலம் அண்ணா சிலை அருகே உள்ள எதிரியின் செல்போன் கடைக்கு வந்து, நானும், எனது நண்பர் சக்திவேல் என்பவரும் பணத்தை திருப்பி தருமாறு எதிரியிடம் கேட்டபோது, எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் எனக்கு காயம் ஏற்பட்டது. நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.02 17:13:25 +0530

3. சிகிச்சையிலிருந்தபோது போலிசார் வந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ) அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

4. நான் ஆஜர் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன். ஆஜர் எதிரியிடம் நான் கொடுத்த ரூ.7,00,000/-ம் தொகையினை எனக்கு திருப்பி கொடுத்துவிட்டார். எனது நண்பர் சக்திவேல் கொடுத்திருந்த பணம் ரூ.4,00,000/-ம் அவருக்கும் திருப்பி கொடுத்துவிட்டார். ஆஜர் எதிரி தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் கையெழுத்து போட்டுள்ளேன். **(அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

5. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆஜர் எதிரி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எனக்கு வேலை வாங்கி தருவதாக கூறி அதற்கு ரூ.7,00,000/- ம் பணம் வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் நான் அவரிடம் ரூ.7,00,000/-ம் பணம் கொடுத்திருந்தேன். அதேபோல் என்னுடன் வேலை செய்த எனது நண்பர் சக்திவேல் என்பவரும் வேலை வாங்கி தருவதாக ஆஜர் எதிரி கூறியதன் அடிப்படையில் சக்திவேல் என்பவரும் ரூ.4,00,000/-ம் ஆஜர் எதிரியிடம் கொடுத்தார் என்றும், மேற்படி பணத்தை பெற்றுக்கொண்டு ஆஜர் எதிரி வேலை வாங்கி தராமல் வேலைக்கான உத்தரவு கிடைத்துவிட்டது என்று பொய்யாக கூறி நம்பிக்கை மோசடி செய்து வேலை வாங்கி தராமலும் பணத்தை திருப்பி தராமலும் இருந்தார் என்றும், அதைத்தொடர்ந்து 27.12.2022 ஆம் தேதி மாலை 04.15 மணியளவில் தாரமங்கலம் அண்ணா சிலை அருகே உள்ள ஆஜர் எதிரியின் செல்போன் கடையில் நானும், சாட்சி சக்திவேல் என்பவரும் ஆஜர் எதிரியிடம் பணத்தை திருப்பி தருமாறு கேட்டபோது, ஆஜர் எதிரி எங்கள் இருவரையும் கெட்ட வார்த்தையால் திட்டி என்னை கையால் அடித்து, காலால் உதைத்தார் என்றும், அதைத்தடுத்த சாட்சி சக்திவேல் என்பவரை கையால் கன்னத்தில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.02 17:13:30 +0530

அடித்தார் என்றும், அதைத்தொடர்ந்து ஆஜர் எதிரி விறகு கட்டையால் எனது இடது பக்க முதுகில் அடித்து என் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கொடுமைபடுத்தி, என்னையும் சாட்சி சக்திவேல் என்பவரையும் பார்த்து கொலை மிரட்டல்விடுத்ததாக கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.21 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.02 17:13:35 +0530